சென்னை குடிநீர் தேவைக்கான கிருஷ்ணா நதி நீர் திறப்பு, தெலுங்கு-கங்கை கால்வாய் மதகு சீரமைப்பு பணிக்காக நிறுத்தப்பட்ட நிலையில், மீண்டும் கண்டலேறு அணையில் இருந்து, திறக்கப்பட்டு, நேற்று காலை கிருஷ்ணா நீர் தமிழக எல்லையை வந்தடைந்தது. அதனை தமிழக நீர் வள ஆதாரத் துறையினர் மலர்த் தூவி வரவேற்றனர்.

கிருஷ்ணா நீர் தமிழகம் வருகை

திருவள்ளூர்

சென்னை குடிநீருக்காக ஆந்திர மாநிலம் -கண்டலேறு அணையில் இருந்து, தெலுங்கு- கங்கை திட்ட கால்வாய் மூலம் கிருஷ்ணா நதி நீர் கடந்த மார்ச் 24-ம் தேதி திறக்கப்பட்டது.

இந்நிலையில், கிருஷ்ணா நதி நீர் திறப்பை, தெலுங்கு- கங்கை கால்வாயில், ஆந்திர மாநிலம்- ஶ்ரீகாளஹஸ்தியில் மதகு சீரமைப்பு பணி மேற்கொள்வதற்காக ஏப். 19-ம் தேதி ஆந்திர நீர் வளத் துறையினர் நிறுத்தினர். இதனால், கிருஷ்ணா நதி நீர், தமிழக எல்லைக்கு வருவது ஏப். 24-ம் தேதி, முற்றிலுமாக நின்றது.

இச்சூழலில், தெலுங்கு-கங்கை கால்வாய் மதகு சீரமைப்பு பணி முடிவடைந்ததையடுத்து, கடந்த 5-ம் தேதி மீண்டும் சென்னை குடிநீருக்காக கிருஷ்ணா நதி நீரை கண்டலேறு அணையில் இருந்து, ஆந்திர நீர் வளத் துறையினர் திறந்தனர். தொடக்கத்தில் விநாடிக்கு 500 கன அடி என, திறக்கப்பட்ட கிருஷ்ணா நதி நீரின் அளவு படிப்படியாக அதிகரிக்கப்பட்டு, கடந்த 19-ம் தேதி விநாடிக்கு 2,500 கன அடியாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

கண்டலேறு அணையில் இருந்து திறக்கப்பட்ட கிருஷ்ணா நதி நீர், 4 அல்லது 5 நாட்களில் தமிழக எல்லையான தாமரைக்குப்பம் ஜீரோ பாயிண்டுக்கு வரவேண்டிய நிலையில், 10 நாட்கள் தாமதமாக நேற்று காலை 7 மணிக்கு வந்தடைந்தது. அப்போது, தமிழக எல்லைக்கு வந்த கிருஷ்ணா நதி நீரின் அளவு விநாடிக்கு 50 கன அடியாக இருந்தது. அதனை, நீர்வள ஆதாரத் துறையின் கிருஷ்ணா குடிநீர் வழங்கும் திட்டம்- கோட்டம்- 1-ன் செயற்பொறியாளர் மகேந்திரன், உதவி கோட்ட செயற்பொறியாளர் ராஜாசிதம்பரம், உதவி பொறியாளர்கள் சதீஷ்குமார், பரத் மலர்த் தூவி வரவேற்றனர்.

மேவளூர்குப்பம் பகுதியில்

கோயில் நில அளவீடு செய்யும் பணி தொடக்கம்

காஞ்சிபுரம்

காஞ்சிபுரம் மாவட்டம், ஶ்ரீபெரும்புதூர் வட்டம் மேவளூர் குப்பம் வள்ளீஸ்வரர் தேவஸ்தானத்துக்கு சொந்தமான நிலங்களை அளவீடு செய்யும் பணியை அமைச்சர்கள் பி.கே.சேகர்பாபு தா.மோ.அன்பரசன் தொடங்கி வைத்தனர். இந்த நிலம் 2 லட்சத்து 1-வது ஏக்கர் என்பது குறிப்பிடத்தக்கது.

காஞ்சிபுரம் மாவட்டம் மேவளூர் குப்பத்தில் வள்ளீஸ்வரர் கோயிலுக்கு சொந்தமான நிலத்தை அளவீடு செய்து அமைச்சர்கள் பி.கே.சேகர்பாபு, தா.மோ.அன்பரசன் கல் நடுகின்றனர். உடன் ஆட்சியர் கலைச்செல்வி.

இந்து சமய அறநிலையத் துறை, தனது நிர்வாகக் கட்டுப்பாட்டிலுள்ள கோயில்களில் குடமுழுக்குகள் நடத்துதல், பக்தர்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகளை மேம்படுத்தி வழங்குதல், கோயிலுக்கு சொந்தமான சொத்துகளை ஆக்கிரமிப்பாளர்களிடமிருந்து மீட்டெடுத்தல், கோயில் நிலங்களை நவீன தொழில் நுட்பத்துடன் கூடிய ரோவர் கருவிகள் மூலம் அளவீடு செய்து பாதுகாத்தல் போன்ற பல்வேறு பணிகளை சீரிய முறையில் மேற்கொண்டு வருகிறது.

இந்த அரசு பொறுப்பேற்ற பின் கோயில்களுக்கு சொந்தமான சொத்துகளை ஆக்கிரமிப்பிலிருந்து மீட்டெடுக்கும் பணிகள், கோயில் நிலங்களை அளவீடு செய்து பாதுகாக்கும் பணிகளை மேற்கொள்ள வருவாய் துறையின் மூலம் 40 தனி வட்டாட்சியர்கள், 172 உரிமம் பெற்ற நில அளவர்கள் நியமனம் செய்யப்பட்டனர். இப்பணிகளை துரிதப்படுத்தும் வகையில் ரூ.1.89 கோடி செலவில் நவீன தொழில் நுட்ப வசதிகளுடன் கூடிய 36 ரோவர் (DGPS – Rover) கருவிகள் கொள்முதல் செய்யப்பட்டு, அளவீடு செய்யும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் 2021-ம் ஆண்டு செப். 8-ம் தேதி சென்னை, மயிலாப்பூர், கபாலீஸ்வரர் கோயில் வளாகத்தில் ரோவர் கருவியின் மூலம் முதன் முதலாக நில அளவை செய்யும் பணிகளை தொடங்கி வைத்தார். நில அளவை செய்யப்பட்ட இடங்களில் இந்து அறநிலையத் துறை (HRCE) என்ற எழுத்துகளுடன் கூடிய எல்லைக் கற்கள் நடப்பட்டு, அறிவிப்பு பலகை வைக்கப்பட்டு பாதுகாக்கப்பட்டு வருகின்றன.

காஞ்சிபுரம் மாவட்டம், திருப்புலிவனம், வியாக்ரபுரீஸ்வரர் கோயிலுக்குச் சொந்தமான நிலத்தில் 50,001 ஏக்கர் நிலம் அளவீடு செய்யும் பணி, திருவள்ளூர் மாவட்டம், பெரியபாளையம், பவானியம்மன் கோயிலுக்குச் சொந்தமான நிலத்தில் 1,00,001-வது ஏக்கர் நில அளவீடு செய்யும் பணியும், தருமபுரி மாவட்டம், கோபாலம்பட்டி, பேட்ராய சுவாமி கோயிலுக்குச் சொந்தமான 1,50,001-வது ஏக்கரை நில அளவீடு செய்யும் பணி தொடங்கி வைக்கப்பட்டன.

இதுவரை 7,560 ஏக்கர் நிலங்கள் மீட்கப்பட்டுள்ளன. 2 லட்சம் ஏக்கர் நிலங்கள் அளவீடு செய்யப்பட்டுள்ளன. தற்போது 2 லட்சத்து 1-வது ஏக்கர் அளவீடு செய்யப்பட்டது. இந்த நிலத்துக்கான எல்லை கற்களும் நடப்பட்டன.

இந்த நிகழ்ச்சியில் ஆட்சியர் கலைச்செல்வி, இந்து சமய அறநிலையத் துறை கூடுதல் ஆணையர் சி.பழனி, ஶ்ரீபெரும்புதூர் சார் ஆட்சியர் மிருணாளினி, காஞ்சிபுரம் மண்டல இணை ஆணையர் சி.குமாரதுரை, துணை ஆணையர்கள் எம்.ஜெயா, கே.சித்ராதேவி உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.

புதிய மேல்நிலை நீர்தேக்க தொட்டி மதுராந்தகத்தில் திறப்பு

மதுராந்தகம்

செங்கல்பட்டு மாவட்டம், மதுராந்தகம் நகராட்சிக்கு உட்பட்ட 5-வது வார்டு பிள்ளையார் கோயில் தெருவில், மதுராந்தகம் தொகுதி மேம்பாட்டு திட்டத்தின் கீழ் மேல்நிலை நீர்தேக்க தொட்டி அமைக்க ரூ.10.74 லட்சம் நிதி ஒதுக்கப்பட்டது.

இதன் மூலம், அப்பகுதியில் 10 ஆயிரம் லிட்டர் கொள்ளளவு கொண்ட நீர்தேக்க தொட்டி அமைக்கப்பட்டது. இதன் திறப்பு விழா நிகழ்ச்சி நேற்று நடைபெற்றது. இதில், மதுராந்தகம் எம்எல்ஏ மரகதம் பங்கேற்று மேல்நிலை நீர்தேக்க தொட்டியை பயன்பாட்டுக்கு திறந்துவைத்தார். பின்னர், அதேப்பகுதியில் அதிமுக சார்பிலான தண்ணீர் பந்தலை பயன்பாட்டுக்கு திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில், நகரமன்ற கவுன்சிலர்கள் மற்றும் அக்கட்சியின் நிர்வாகிகள், பொதுமக்கள் என பலர் கலந்து கொண்டனர்.

சுற்றுச்சுவர் அமைக்க பள்ளம் தோண்டும்போது

ராணுவ வெடிகுண்டு கண்டெடுப்பு

பொன்னேரி

பொன்னேரியில் சுற்றுச்சுவர் அமைக்க பள்ளம் தோண்டும்போது ராணுவ வெடிகுண்டு கண்டெடுக்கப்பட்டது.

மண்ணடி பகுதியை சேர்ந்த முஸ்தபா என்பவர், சென்னை, எண்ணூர் ராமகிருஷ்ணா நகர் பகுதியில் உள்ள பழைய வீட்டை, சமீபத்தில் வாங்கினார். இதையடுத்து, அந்த வீட்டில் சுற்றுச் சுவர் அமைப்பதற்காக பள்ளம் தோண்டும் பணி நேற்று நடைபெற்றது. அப்போது, ராணுவத்தில் பயன்படுத்தும் வெடிகுண்டு ஒன்று வெடிக்காத நிலையில் மண்ணில் புதைந்து இருந்தது தெரிய வந்தது.

இதனால், அதிர்ச்சியடைந்த முஸ்தபா, போலீஸாருக்கு தகவல் அளித்தார். இதையடுத்து, வெடிகுண்டு நிபுணர்கள், எண்ணூர் போலீஸார் துப்பறியும் நாயுடன், சம்பவ இடம் விரைந்து, ஆய்வு செய்தனர்.

பிறகு, வெடிகுண்டு நிபுணர்கள், போலீஸார், சுமார் ஒன்றரை அடி உயரம் மற்றும் 10 செ.மீ. அகலம் கொண்ட துருப்பிடித்த நிலையில் இருந்த, இரும்பாலான வெடிகுண்டை பறிமுதல் செய்து பாதுகாப்பான இடத்தில் வைத்துள்ளனர். இந்த வெடிகுண்டு 2-ம் உலகப் போரின்போது ஜப்பான் வான் வழியாக தாக்குதல் நடத்துவதற்காக பயன்படுத்தப்பட்டது என கூறப்படுகிறது.

போலீஸார், வெடிகுண்டை பாதுகாப்பான இடத்தில் வைத்து, அழிப்பதற்கான நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

கேண்டரே ஜூவல்லர்ஸின் பிராண்ட் அம்பாசிடர் ஷாருக்கான்

சென்னை

கல்யாண் குழுமத்தின் நகை பிராண்டான கேண்டரே நிறுவனத்தின் பிராண்ட் அம்பாசிடராக பாலிவுட் நடிகர் ஷாருக்கான் நியமிக்கப்பட்டுள்ளார்.

இதுகுறித்து அந்நிறுவனம் வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது: ஷாருக்கானின் உலகளாவிய ஈர்ப்பு மற்றும் வசீகரம் ஆகியவை கேண்டரேயின் தொலைநோக்கு பார்வைக்கு பொருத்தமாக இருகிறார். இதனால் டிஜிட்டல், தொலைக்காட்சி, அச்சு உள்ளிட்ட பிராண்டின் பல்துறை விளம்பரப் பிரச்சாரங்களில் அவர் இடம் பெற உள்ளார்.

கேண்டரே இயக்குநர் ரமேஷ் கல்யாணராமன் கூறும்போது, "இந்திய நகைத் துறையில் கேண்டரே தனித்துவமான நகை வடிவமைப்புகளை உருவாக்குகிறது. கலாச்சார ஒத்திசைவு, அனைவரையும் ஈர்க்கும் தன்மை போன்றவற்றில் கேண்டரே மதிப்புகளை பிரதிபலிக்கும் ஒரு கூட்டாளியை நாங்கள் கண்டறிந்தோம். இன்றைய பார்வையாளர்களுக்கு ஷாருக்கான் மிகவும் பொருத்தமானவராக இருப்பதுடன் அடுத்த தலைமுறையையும் இணைக்கும் ஒரு பாலமாக இருப்பதால் அவரை அம்பாசிடராக தேர்வு செய்தோம்" என்றார்.

கேண்டரே, நவீன வடிவமைப்பு சார்ந்த வரிசைகளுடன் நகைத் துறையில் ஒரு தனித்துவமான இடத்தைப் பிடித்துள்ளது. மேலும் பெண்களுக்கான நவீன நகை வகைகள் பரவலாக அறியப்பட்டாலும், ஆண்களுக்கான நகை வரிசைகளை கேண்டரே பிரத்யேகமாக உருவாக்கியுள்ளது. இதுகுறித்து ஷாருக்கான் மகிழ்ச்சி தெரிவித்தார்.

வாடிக்கையாளர்கள் கேண்டரேவின் இ-காமர்ஸ் தளம் மற்றும் ரீடெயில் கடைகள் ஆகியவற்றில் நகைகளை எளிதாக பார்வையிடவும், வாங்கவும் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. கல்யாண் ஜுவல்லர்ஸின் நம்பகமான மரபைக் கொண்டு தினசரி அணிவதற்கும் பரிசு பொருளாகவும் வழங்கவும் ரூ.10 ஆயிரம் முதல் நேர்த்தியுடனும் மலிவு விலையிலும் நகைகளை வழங்குகிறது. இந்தியா முழுவதும் 75-க்கும் மேற்பட்ட ரீடெயில் கடைகள் உள்ளன.

தமிழ்நாடு அரசு

நெடுஞ்சாலைத்துறை

திட்டங்கள் வட்டம், சென்னை-16

ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு

ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண்.02/2025-2026/மு.வ.அ/நாள்:20.05.2025

தமிழ்நாடு ஆளுநருக்காகவும், அவர்களின் சார்பாகவும் கண்காணிப்புப் பொறியாளர் (நெ), திட்டங்கள் வட்டம், சென்னை அவர்களால் **இரயில்வே திட்டப்பணிகள் 2007-08-ன் கீழ் சென்னை (நெ) திட்டங்கள் கோட்டத்திற்கான** ஒரு மேம்பாலப்பணிக்கு (மீதமுள்ள பணி) இணையவழியில் மட்டுமே இனவாரி விலை ஒப்பந்தப்புள்ளி **02.06.2025, 14.00 மணி வரை** வரவேற்கப்படுகிறது.

பணியின் விவரம், தோராய மதிப்பு, முன்வைப்பு தொகை, ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் மற்றும் அனைத்து இதர விவரங்களை **https://tntenders.gov.in** என்ற அரசு இணையதளத்தில் **23.05.2025 முதல்** தெரிந்துகொள்ளலாம். ஏதேனும் திருத்தங்கள் / மாறுதல்கள் இருப்பின் மேற்குறிப்பிட்ட அரசு இணையதளத்தில் மட்டுமே வெளியிடப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.

கண்காணிப்புப் பொறியாளர் (நெ),
திட்டங்கள், சென்னை-16

செ.ம.தொ.இ/2417/ஒப்பந்தப்புள்ளி/2025

தமிழ்நாடு அரசு

நெடுஞ்சாலைத்துறை

திருவண்ணாமலை நெடுஞ்சாலை, (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) வட்டம்.

ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு

ஒ.அ.எண். 06/2025-26/ தவஅ/ நாள்: 20.05.2025.

தமிழ்நாடு ஆளுநருக்காகவும், அவர்களின் சார்பாகவும், கண்காணிப்புப்பொறியாளர் (நெ), க(ம)ப, திருவண்ணாமலை வட்டம் அவர்களால், **பாராளுமன்ற உறுப்பினரின் உள்ளூர் பகுதி மேம்பாட்டுத் திட்டப்பணிகள் 2025 - 26 திட்டத்தின் கீழ் திருவண்ணாமலை** (நெ), க(ம)ப, கோட்டத்தைச் சார்ந்த **பணிக்கு ஓர் உறைமுறையில் (1 பணிக்கு) இணைய வழி மட்டுமே சதவீத ஒப்பந்தப்புள்ளிகள் 10.06.2025 அன்று 12.00மணி** வரை வரவேற்கப்படுகின்றன.

பணிகளின் விவரம், தோராய மதிப்பு, இணையவழி முன்வைப்புத்தொகை, ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் மற்றும் அனைத்து இதர விபரங்களை **https://tntenders.gov.in** என்ற அரசு இணையதளத்தில் **24.05.2025** முதல் தெரிந்துகொள்ளலாம். ஏதேனும் திருத்தங்கள் / மாறுதல்கள் இருப்பின் மேற்குறிப்பிட்ட அரசு இணையதளத்தில் மட்டுமே வெளியிடப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.

கண்காணிப்புப்பொறியாளர்(நெ),
க(ம)ப, வட்டம், திருவண்ணாமலை

செ.ம.தொ.இ/2426/ஒப்பந்தப்புள்ளி/2025

இந்திய ரிசர்வ் வங்கி

www.rbi.org.in

விதிமுறை துறை

ஒருங்கிணைந்த மண்டல அலுவலகம், ராஜாஜி சாலை

சென்னை - 600 001

பதிவு சான்றிதழை ரத்து செய்தல் - பொது அறிவிப்பு

இந்திய ரிசர்வ் வங்கி, இந்திய ரிசர்வ் வங்கிச் சட்டம், 1934, பிரிவு 45-IA (6)-ன் கீழ் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைப் பயன்படுத்தி, கீழ்கண்ட நிறுவனங்களுக்கு வங்கியல்லாத நிதி நிறுவனத்தின் வணிகத்தை மேற்கொள்வதற்காக வழங்கப்பட்ட பதிவுச் சான்றிதழை, ரத்து செய்துள்ளது. எனவே, இந்தச் சட்டத்தின் கீழ், கீழ்கண்ட நிறுவனங்கள் வங்கியல்லாத நிதி நிறுவனத்தின் வணிகத்தை மேற்கொள்ள முடியாது.

வரிசை எண்	நிறுவனத்தின் பெயர் மற்றும் CIN எண்	நிறுவனத்தின் பதிவு செய்யப்பட்ட அலுவலக முகவரி	பதிவு சான்றிதழ் எண் மற்றும் தேதி	ஆணை ரத்து செய்யப்பட்ட தேதி
1	அரமுஸ்க் இன்ஃப்ராஸ்ட்ரக்சர் இன்வெஸ்ட்மென்ட் லிமிடெட் (CIN-L45201TN1995PLC033531)	டி1, சிருஷ்டி கிரெஸ்சென்டோ, 24, தேசிக்கா ரோடு, சென்னை - 600004	ஜூன் 12, 2001 தேதியிட்ட எண் B-07.00182	மார்ச் 24, 2025
2	மேட்ரிக்ஸ் ஃபைனான்சியல் சர்வீசஸ் லிமிடெட் (CIN-U65993TN1992PLC023446)	டி1, சிருஷ்டி கிரெஸ்சென்டோ, 24, தேசிக்கா ரோடு, சென்னை - 600004	டிசம்பர் 27, 2000 தேதியிட்ட எண் B-07.00554	மார்ச் 24, 2025
3	தாமிரபரணி இன்வெஸ்ட்மென்ட் பிரைவேட் லிமிடெட் (CIN-U65991TN1993PTC025974)	டி1, சிருஷ்டி கிரெஸ்சென்டோ, 24, தேசிக்கா ரோடு, சென்னை - 600004	ஜனவரி 10, 2002 தேதியிட்ட எண் B-07.00674	மார்ச் 24, 2025
4	விஸ்வப்பிரியா கோல்டு ஹையர் பர்சேஸ் லிமிடெட் (MCA பதிவுகளின்படி விஸ்வப்பிரியா ஃபைனான்ஸ் லிமிடெட் என பெயர் மாற்றப்பட்டுள்ளது) (CIN-U65921TN1991PLC021082)	75-சி, II மெயின் ரோடு, காந்தி நகர், அடையாறு, சென்னை - 600020	ஏப்ரல் 08, 2002 தேதியிட்ட எண் B-07.00214	மார்ச் 24, 2025

பதிவு சான்றிதழ் ரத்துசெய்யப்பட்ட வங்கிசாரா நிதி நிறுவனங்களின் பெயர்களைக் கொண்ட பட்டியல் இந்திய ரிசர்வ் வங்கியின் அதிகாரப்பூர்வ இணையதளமான https://rbi.org.in/Scripts/BS_NBFCList.aspx-ல் வெளியிடப்பட்டுள்ளது. இந்த பட்டியல் அவ்வப்போது மேம்படுத்தப்படுகிறது.

இது பொதுநலன் கருதி வெளியிடப்படுகிறது.

இடம்: சென்னை
தேதி: மே 22, 2025

-கையொப்பமிட்டது-
(கி சுப்பிரமணியன்)
பொது மேலாளர்

OMKARA ஓம்காரா சொத்துக்கள் மறுகட்டமைப்பு பிரைவேட் லிமிடெட்

கார்ப்பேரேட் அலுவலகம் : கோஹினூர் ஸ்கூயர், 47வது தளம், N.C. கேல்கர் மார்க்,
R.G. கட்கரி சௌக், தாதர் மேற்கு, மும்பை 400028. Tel: 022-69231111

[இணைப்பு - IV-A] [9(1) உடன் விதி 8(6)-யை பார்க்கவும்]

அசையா சொத்துக்கள் விற்பனைக்கான மின்-விற்பனை பொது அறிவிப்பு

பாதுகாப்பு வட்டி (அமலாக்கம்) விதிகள், 2002-ன் விதி 8(6) மற்றும் 9(1)-ன் விதிமுறைகளுடன் 2002-ஆம் ஆண்டின் நிதிச் சொத்துக்களின் பாதுகாப்பு மற்றும் மறுகட்டமைப்பு மற்றும் பாதுகாப்பு வட்டி அமலாக்கத்தின்கீழ் அசையாச் சொத்துக்களை விற்பனை செய்வதற்கான மின்-ஏலம் விற்பனை அறிவிப்பு.

பொது மக்களுக்கு பொதுவாகவும் மற்றும் கடன்தாரர்/இணை-கடன்தாரர்/ஜாமீன்தாரர்/ அடமானதாரர்களுக்கு குறிப்பாகவும் அறிவிக்கப்படுவது யாதெனில், **M/s Marg Limited (கடன்தாரர் மற்றும் அடமானதாரர்) மற்றும் திரு. G. ராமகிருஷ்ணா ரெட்டி (ஜாமீன்தாரர்) மற்றும் M/s Wisdom Constructions Private Limited (அடமானதாரர்), M/s Grand Lokin School Private Limited (அடமானதாரர்), M/s Avatar Constructions Private Limited (அடமானதாரர்), Mukta Academic Institutions Private Limited (அடமானதாரர்), Marg Properties Private Limited (அடமானதாரர்)** ஆகியோர் கீழ் விவரிக்கப்பட்டுள்ள அசையா சொத்துக்களை அசல் பாதுகாப்பு கடன் அளித்தவர் அதாவது IFCI வென்சர் கேபிட்டல் பண்ட்ஸ் லிமிடெட் ("IFCI")-க்கு அடமான வைக்கப்பட்டது மற்றும் ஓம்காரா சொத்துக்கள் மறுகட்டமைப்பு பிரைவேட் லிமிடெட்-க்கு கடன் கணக்கு ஒதுக்கப்பட்டது (**ஓம்காரா PS01/2024-25 அறக்கட்டளையின்** அறங்காவலராகச் செயல்படும்) **(ஓம்காரா ARC)** இந்திய ரிசர்வ் வங்கியில் 1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின்கீழ் சொத்து மறுசீரமைப்பு நிறுவனமாக இணைக்கப்பட்டது மற்றும் அதன் பதிவு அலுவலகம் 9, M.P நகர், 1வது தெரு, கொங்கு நகர் விரிவு, திருப்பூர் 641607 மற்றும் கார்ப்பேரேட் அலுவலகம் கோஹினூர் ஸ்கூயர், 47வது தளம், N.C. கேல்கர் மார்க், R.G. கட்கரி சௌக், தாதர் (மேற்கு), மும்பை 400028, பாதுகாக்கப்பட்ட கடன் அளித்தவராக இருப்பதால், மேலே கூறப்பட்ட கடன்தாரர்/இணை-கடன்தாரர்/ஜாமீன்தாரர்கள்/ அடமானதாரர்கள் மீது நிலுவையில் உள்ள முழு கடன்களையும் 13.11.2024 தேதியிட்ட ஒதுக்கீட்டு ஒப்பந்தத்தின் மூலம் IFCI-ன் அடிப்படைப் பாதுகாப்போடு பெற்றுள்ளார். அதன்படி, ஓம்காரா ARC, IFCI உடன் இணைந்து, முழு நிலுவைத் தொகையையும் வசூலிக்கவும், பத்திரங்களைச் செயல்படுத்தவும் உரிமை பெற்றுள்ளது. கீழே குறிப்பிடப்பட்டுள்ள பாதுகாக்கப்பட்ட சொத்தினை IFCI-ன் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியால் 08.10.2015 அன்று சுவாதீனம் எடுத்துக் கொள்ளப்பட்டது. மேலே குறிப்பிடப்பட்ட கடன்தாரர்/இணை-கடன்தாரர்/ஜாமீன்தாரர்கள்/ அடமானதாரர்கள் ஓம்காரா ARC பாதுகாப்பு கடன் அளித்தவருக்கு 16.05.2025 அன்று செலுத்த வேண்டிய நிலுவை அதாவது **15.05.2025 அன்றைய தேதியில் ரூ.1,35,53,91,223/- (ரூபாய் நூற்றி முப்பத்தி ஐந்து கோடியே ஐம்பத்தி மூன்று இலட்சத்து தொண்ணூற்றி ஓராயிரத்து இருநூற்றி இருபத்தி மூன்று மட்டும்) நிலுவை தொகையை வசூலிக்க "எங்கே இருக்கிறதோ அப்படியே", "இருப்பது போலவே" மற்றும் "எதுவாக இருந்தாலும்" மற்றும் "எந்த உதவியும் இல்லாமல்"** என்ற அடிப்படையில் **12.06.2025, காலை 11.00 மணிக்கு** விவரிக்கப்பட்டுள்ள அசையா சொத்துக்கள் விற்கப்படும். SARFAESI சட்டத்தின் விதிகளின் கீழ் உரிமைகள் மற்றும் அதிகாரத்தைப் பயன்படுத்தி சொத்துக்கள் விற்கப்படும்.

அசையாச் சொத்தின் விவரம், ரிசர்வ் தொகை மற்றும் முன்வைப்புத் தொகை மற்றும் அறியப்பட்ட வில்லங்கங்கள் (ஏதேனும் இருந்தால்) பின்வருமாறு:

சொத்தின் விவரம்	கோரிக்கை அறிவிப்பு நாள் மற்றும் தொகை	ரிசர்வ் தொகை	EMD	ஏலம் உயர்வு தொகை
Grand Lokin School Private Limited -க்கு சொந்தமான நிலம் சொத்து, சர்வே எண்.240/10A, 240/10C, 240/10E, 240/4F, 240/4C, 240/40, 240/4B, 240/9, 245/10, 241/3A, 245/10, 240/10B, 240/10D, 240/10G, 245/1, 246/2, 246/8, 241/6A, 241/6D, 241/6F, 241/6H, 241/6K, 241/60, 241/6Q, 241/6T, 241/6B, 241/6E, 241/61, 241/6N, 241/6R, 246/9, 246/4, 240/4D, 240/4I, 240/4M, 240/4C, 240/4E, 240/4J, 240/4N, 240/4A, 240/4G, 240/4L, 240/4P, 240/4H, 245/11 = மொத்தம் 11.715 ஏக்கர்கள் கொண்ட பட்டா எண்.411, ஆலந்தூர் கிராமம், செங்கல்பட்டு தாலுகா, காஞ்சிபுரம் மாவட்டம் மற்றும் செங்கல்பட்டு பதிவு மாவட்டம் மற்றும் திருப்பூர் சார்-பதிவு மாவட்டத்தில் அமைந்துள்ளது.	03.08.2015 & ரூ. 19,68,29,170/- (ரூபாய் பத்தொன்பது கோடியே அறுபத்தி எட்டு இலட்சத்து இருபத்தி ஒன்பதாயிரத்து நூற்றி எழுபது மட்டும்) ஜூலை 21, 2015 தேதியில்	ரூ. 17,85,00,000/-	ரூ. 1,78,50,000/-	ரூ. 20,00,000/-

மின்-ஏலம் நாள்	12.06.2025, வியாழக்கிழமை மாலை 1.00 மணிமுதல் மாலை 3.00 மணிவரை
பார்வையிடும் நாள்	30.05.2025, வெள்ளிக்கிழமை
பங்குபெறும் சுருத ஏலம்/KYC ஆவணம்/EMD ஆதாரம் சமர்ப்பிக்கும் கடைசி நாள் மற்றும் நேரம்	11.06.2025, புதன்கிழமை மாலை 6.00 மணி
சுவாதீனம் தன்மை	பிசிக்கல் சுவாதீனம்
அறியப்படும் பொறுப்புகள்	இல்லை

OARPL இந்த ஏலத்தை ஆன்லைனில் நடத்தும். ஏலம் சமர்ப்பிக்கும் நேரத்தில், ஏலதாரர் [illegible] https://omkaraarc.com/auction.php and/or https://www.bankeauctions.com [illegible] "M/s. C1 India Pvt. Ltd", Tel. Helpline: +91-7291981124/25/26, Helpline E-mail ID : support@bankeauctions.com [illegible] maharashtra@c1india.com [illegible] Mobile: +91 8879093790/7733030154, E-mail: piyush.jain@omkaraarc.com [illegible]

சட்டப்பூர்வ வட்டி (அமலாக்கம்) விதிகள் 2002-ன் விதி 8(6)-ன் உடன் 9(1)-ன் கீழ் விற்பனைக்கான அறிவிப்பு

[illegible] மறுகட்டமைப்பு மற்றும் பாதுகாப்பு வட்டி அமலாக்கச் சட்டம் 2002 ஆகியவற்றின் கீழ் 15 (பதினைந்து) நாட்கள் கட்டாய அறிவிப்பாகவும், மேலே குறிப்பிட்டப்பட்ட தேதி மற்றும் நேரத்தில் பொது ஏலம் மூலம் விற்பனை நடத்துவது குறித்து அவர்களுக்கு தெரிவிக்கும் அறிவிப்பாகும். மேலே குறிப்பிட்டுள்ளபடி நிலுவையில் உள்ள நிலுவைத் தொகையை மேலும் வட்டி செலவுகள் மற்றும் கட்டணங்களுடன் செலுத்துவதன் மூலம், அவர்கள் விரும்பினால் சொத்துக்களை மீட்டெடுக்க ஆலோசனை வழங்கப்படும். பணம் செலுத்தத் தவறினால், அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி/பத்திரக் கடன் வழங்குநரின் விருப்பப்படி, சொத்தினை பாதுகாப்பு வட்டி (அமலாக்கம்) விதி 2002-ன் விதி 8(5)-ன்கீழ் குறிப்பிடப்பட்டுள்ள எந்தவொரு முறையிலும் விற்கப்படும்.

Sd/- பியூஷ் ஜெயின், டெபுட்டி துணை தலைவர் - அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி
ஓம்காரா சொத்துக்கள் மறுசீரமைப்பு பிரைவேட் லிமிடெட்
(Omkara PS 01/2024-25 அறக்கட்டளையின் அறங்காவலராக செயல்படுகிறது)

நாள் : 22.05.2025
இடம் : மும்பை

மூடப்பட்ட ஆலைகளை திறக்க வலியுறுத்தி

தொழிற்சங்கங்களின் கூட்டமைப்பு ஆர்ப்பாட்டம்

சென்னை

தமிழ்நாடு தொழிற்சங்கங்களின் கூட்டமைப்பு சார்பில் ராஜரத்தினம் மைதானம் அருகே நடந்த கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டத்துக்கு கூட்டமைப்பின் தலைவர் தனசேகரன் தலைமை வகித்தார். துணைத் தலைவர் சி.வி.குமார் வரவேற்றார். தொழிற்சங்கத் தலைவர் டாக்டர் ஜெய்லானி சிறப்புரையாற்றினார்.

ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்றவர்கள் பேசியதாவது: நாடு முழுவதும் பல பஞ்சாலைகள் மூடப்பட்டுள்ளன. தூத்துக்குடியில் மதுரா கோட்ஸ் கூட்டுறவு நூற்பாலை, ஸ்டெர்லைட் தாமிர உருக்காலை ஆகியவை மூடப்பட்டுள்ளன. உப்பு உற்பத்தி குறைந்ததால், அதை சார்ந்து இருந்த தொழிலாளர்களும் வேலை வாய்ப்பை இழந்து, பெரு நகரங்களை நோக்கி வேலை தேடிச் செல்வதால் நெருக்கடி முற்றுகிறது. தமிழகம் முழுவதும் மூடப்பட்ட பல்வேறு ஆலைகளைத் திறக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்றனர்.

ஆர்ப்பாட்டத்தில், ஸ்டெர்லைட் ஆலை பகுதி கிராம மக்கள், தூத்துக்குடி கடலோரப் பகுதி மீனவ உட்பட பல்வேறு சங்கங்களைச் சேர்ந்தவர்கள் கலந்துகொண்டனர்.

திருப்புட்குழி அரசு தொடக்கப் பள்ளியில்

கியூ ஆர் கோடு மூலம் மாணவர் சேர்க்கை

காஞ்சிபுரம்

காஞ்சிபுரம் அருகே உள்ள திருப்புட்குழி அரசு தொடக்கப் பள்ளியில் கியூ ஆர் கோடு பயன்படுத்தி வீட்டிலிருந்தே மாணவர்களை பள்ளியில் சேர்க்கும் நடைமுறை அமல்படுத்தப்பட்டுள்ளது.

இந்த தொடக்கப் பள்ளியில் சுமார் 500 மாணவ, மாணவிகள் கல்வி பயில்கின்றனர். தலைமை ஆசிரியர், ஆசிரியர்கள் என 10 பேர் பணி செய்கின்றனர். இந்தப் பள்ளியில் திருப்புட்குழி, பாலுசெட்டிசத்திரம், சிறுணை, முட்டவாக்கம், கூத்திரமேடு, தாமல், கொட்ராங்குளம், மேல்பங்காரம் உள்ளிட்ட கிராமங்களில் இருந்தும் மாணவர்கள் வந்து படிக்கின்றனர்.

இங்கு அனைத்து வகுப்பறைகளும் ஸ்மார்ட் வகுப்பறைகளாக மாற்றப்பட்டுள்ளன. இதற்கு ஆசிரியர் செல்வகுமார் என்பவர் பெரும் பங்கு வகித்ததாக பள்ளிதரப்பில் கூறப்படுகிறது. மாணவர்களுக்கு கணினியில் வீடியோ வடிவில் பாடம் நடத்துவது, மின்னஞ்சல் மற்றும் வாட்ஸ் ஆப் மூலம் மாணவர்களின் தேர்வு முடிவுகளை பெற்றோருக்கு தெரிவிப்பது ஆகிய முன்னெடுப்புகள் வரவேற்பை பெற்றுள்ளன.

இந்த ஆண்டு ஆன்லைன் மூலம் மாணவர் சேர்க்கையை விரைவுபடுத்தும் பணியை தொடங்கியுள்ளனர். இதற்காக பள்ளி சார்பில் கியூ ஆர் கோடு உருவாக்கப்பட்டு பல்வேறு இடங்களில் வைக்கப்பட்டுள்ளது. இந்த கியூ ஆர் கோடை ஸ்கேன் செய்தால் அதில் விண்ணப்பம் வரும். அதில் கேட்கும் விவரங்களை அளித்தால் சேர்க்கை உறுதிப்படுத்தப்படும். பின்னர் தேவையான சான்றிதழ்களை நேரில் அளித்து பள்ளியில் சேர்ந்து கொள்ளும் வகையில் ஏற்பாடுகளை செய்துள்ளனர். இந்த முயற்சிக்கு அமைச்சர் அன்பில் மகேஸ் முகநூலில் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

வரி விளம்பரங்கள்

சுய செய்தி

பெயர்மாற்றம்

I, MEHARNISSA Surname SHEIK MOHIDEEN, W/O PONNAIH, residing at No 3/555, Kaveri street, Rajeshwari Avenue, Mugalivakkam, Chennai, shall henceforth be known as SP MEHAR NISHA

I, Abirami Nageswaran, w/o Nageswaran Jayaraman, residing at 31/17 Nakeeran Street, West Mambalam, Chennai -600033, shall henceforth be known as Abirami Vasudevan vide affidavit dated 01-04-2025

இந்து தமிழ் திசை

பொறுப்பல்ல: இந்தச் செய்தித்தாளில் பிரசுரம் ஆகியுள்ள விளம்பரங்களின் அடிப்படையில் செயல்படும் முன், அவற்றில் உள்ள தகவல்கள் சரியானவைதானா என்பதை போதுமான அளவு விசாரித்து சரிபார்த்துக்கொள்ளுமாறு வாசகர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். விளம்பரங்கள்/ விளம்பரதாரர் / அவர்களின் தயாரிப்புகள் / சேவைகள் போன்றவற்றின் நம்பகத்தன்மைக்கு இந்தச் செய்தித்தாளின் உரிமையாளரும் பதிப்பாளருமான கஸ்தூரி & சன்ஸ் லிமிடெட் / கே.எஸ்.எல். மீடியா லிமிடெட் உத்தரவாதம் அளிக்கவில்லை. இந்தச் செய்தித்தாளில் வெளியாகும் விளம்பரங்களால் ஏதேனும் சேதம் அல்லது இழப்பு ஏற்படும் பட்சத்தில், இந்தச் செய்தித்தாளின் மேற்சொன்ன நிறுவனங்களின் உரிமையாளர், பதிப்பாளர், அச்சிடுவோர், ஆசிரியர், இயக்குநர்கள், ஊழியர்கள் ஆகியோர் எந்தச் சூழலிலும் எந்த வகையிலும் அதற்குப் பொறுப்பாகமாட்டார்கள்.

படைப்புகளை அனுப்புவோர் பிரதி எடுத்துவைத்துக்கொண்டு அனுப்பவும். பிரசுரமாகாதவற்றைத் திருப்ப அனுப்ப இயலாது.

ஜனா ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க்
(ஒரு அட்டவணை கமர்ஷியல் பேங்க்)

பதிவு அலுவலகம்: தி ஃபர்வே, தரை & முதல் தளம், சர்வே எண்.10/1, 11/2 & 12/2B, ஆஃப் டாம்லூர், கொரமங்களம் உள் வட்ட சாலை, EGL பிசினஸ் பார்க் அடுத்து, செல்லகாட்டா, பெங்களூர்-560071. **கிளை அலுவலகம் :** எண்.28/36, 1வது தளம், தெற்கு மேற்கு போக் சாலை, தி.நகர், சென்னை - 600017.

மின்-ஏலம் அறிவிப்பு

2002-ம் ஆண்டு (SARFAESI ACT) கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் மறுகட்டமைப்பு செய்தல் மற்றும் பாதுகாப்பு வட்டிச் சட்டத்தின் அமலாக்கம் மற்றும் 2002-ம் ஆண்டு (அமலாக்கம்) பாதுகாப்பு வட்டி விதிகள் 8(6) மற்றும் 9-ன் கீழ் மின்-ஏலம் மூலம் விற்பனை செய்வதற்கான பொது அறிவிப்பு.

கீழே கையொப்பமிட்ட **ஜனா ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட்-ன்** அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி ஆனவர் SARFAESI சட்டம் பிரிவு 13(4)ன் கீழ், கீழே விவரிக்கப்பட்டுள்ள சொத்துக்களை தனது **சுவாதீனத்தில்** எடுத்துக்கொண்டார். இதன் மூலம் கடன்தாரர் குறிப்பாகவும், பொது மக்களுக்கும் அறிவிப்பதாவது, கீழ்க்கண்ட நபர்களிடமிருந்து, வங்கிக்கு செலுத்த வேண்டிய கடன் தொகையை வசூலிக்கும் பொருட்டு, கீழ்குறிப்பிட்ட கணக்குகளின் அடமான சொத்துக்களை **"உள்ள இடத்தில் உள்ளவாறு" மற்றும் "உள்ளது உள்ளவாறு"** எனும் அடிப்படையில் **ஆன்-லைன் ஏலத்தின்** (e-auction) மூலம் விதிகள் மற்றும் நிபந்தனைகளின்படி கீழ்குறிப்பிட்ட நாட்களில் விற்பனை செய்ய முடிவு செய்யப்பட்டுள்ளது.

வ. எண்.	கடன் கணக்கு எண்.	உண்மையான கடன்தாரர்/ இணை-கடன்தாரர்/ ஜாமீன்தாரர் பெயர்	13-2 அறிவிப்பு நாள்	சுவாதீன நாள்	05.05.2025-ன்படி தற்போதைய நிலுவை தொகை	சொத்தினை பார்வையிடும் நாள் & நேரம்	ரிசர்வ் தொகை INR-ல்	முன்வைப்பு தொகை (EMD) INR-ல்	மின்-ஏலம் நாள் மற்றும் நேரம்	ஏலம் சமர்ப்பிக்கும் கடைசி நாள், நேரம் மற்றும் இடம்
1	31049440000079	1) M/S. ஆறுமுகம் உரிமையாளர் Jayalakshmi Carpenter Work, 2) ரேவதி, 3) திருமதி. ஜெயலட்சுமி A, 4) ரேகா A	23-11-2023	13-03-2025	ரூ.6,22,589.05 (ரூபாய் ஆறு இலட்சத்து இருபத்தி இரண்டாயிரத்து ஐநூற்றி எண்பத்தி ஒன்பது மற்றும் பைசா ஐந்து மட்டும்)	05.06.2025 காலை 9.30 மணிமுதல் மாலை 5.00 மணிவரை	ரூ.9,69,000/- (ரூபாய் ஒன்பது இலட்சத்து அறுபத்தி ஒன்பது ஆயிரம் மட்டும்)	ரூ.96,900/- (ரூபாய் தொண்ணூற்றி ஆறாயிரத்து தொள்ளாயிரம் மட்டும்)	09.06.2025 நேரம் : காலை 11.00 மணி முதல் மாலை 02.00 மணிவரை	07.06.2025, மாலை 5.00 மணிவரை, ஜனா ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட், எண்.28/36, தெற்கு மேற்கு போக் சாலை, தி.நகர், சென்னை - 600017.
	அட்டவணை சொத்து : நிலம் மற்றும் கட்டிடம் மற்றும் அதனை சார்ந்த அனைத்து பகுதிகளும், கிராம நத்தம் ச.எண்.11/1 அளவுகள் 293.3 அடி பரப்பு (ஒரு பக்கம்) புத்தகரம் கிராமம், அம்பத்தூர் தாலுகா தற்போது மாதவரம் தாலுகா, திருவள்ளூர் மாவட்டம் தற்பொது சென்னை மாவட்டத்திற்குட்பட்டது மற்றும் எல்லைகள்: **வடக்கில் :** திரு. முருகானந்தம் அவர்களின் நிலம், **தெற்கில் :** திருமதி. ராணியம்மாள் அவர்களின் மீதமுள்ள பகுதி, **கிழக்கில் :** 4 அடி பொது பாதை, **மேற்கில் :** திரு. கணேசன், திரு. முருகன் மற்றும் திரு. ஏழுமலை ஆகியோருக்கு சொந்தமான வீடு மற்றும் நிலம், அளவுகள் : கிழக்கிலிருந்து மேற்காக வடக்கு பக்கம் : 23 அடி 0 அங்குலம், கிழக்கிலிருந்து மேற்காக தெற்கு பக்கம் : 23 அடி 0 அங்குலம், வடக்கிலிருந்து தெற்காக கிழக்கு பக்கம் : 12 அடி 9 அங்குலம், வடக்கிலிருந்து தெற்காக மேற்கு பக்கம் : 12 அடி 9 அங்குலம். அம்பத்தூர் சார்-பதிவு மாவட்டம் மற்றும் வட சென்னை பதிவு மாவட்டத்திற்குட்பட்டது.									

மின் ஏலமானது **"உள்ள இடத்தில் உள்ளவாறு" & "உள்ளது உள்ளவாறு"** என்ற அடிப்படையில் **"ஆன்லைனில்"** நடத்தப்படும். மேலே கூறப்பட்ட சொத்தை வாங்குவது தொடர்பான அனைத்து தொகைகளும் **ஜனா ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட்** பெயரில் வழங்க வேண்டும். வங்கியின் அங்கீகரிக்கப்பட்ட சேவை வழங்குநர் நிறுவனத்தின் மூலம் இணையதள ஏற்பாட்டின் **M/s. 4 Closure** இணையதளம் **https://bankauctions.in & www.foreclosureindia.com** மூலம் ஏலம் நடத்தப்படும். மேலும் விபரங்களுக்கு, விதிகள் மற்றும் ஆன்லைன் மின்-ஏல பயிற்சி, விற்பனை விதிகள் மற்றும் நிபந்தனைகள் அடங்கிய மின் ஏல டெண்டர் ஆவணம் ஆகிய தொடர்புக்கு **M/s. 4 Closure, தொடர்பு திரு.M.தினேஷ், தொடர்பு எண். 8142000735. Email id: info@bankauctions.in / dinesh@bankauctions.in.** மேலும் நிபந்தனை மற்றும் விதிகள் விபரங்களுக்கு, ஏல விபரங்கள் மற்றும் மற்ற சொத்தின் வினாக்களுக்கு **ஜனா ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் அதிகாரிகள் திரு. சலீல் P, (மொபைல் எண். 9884474084),** email: salil.p@janabank.com, **திரு. துரை முருகன் (மொபைல் எண். 9841638849),** email: durai.murugan@janabank.com, **திரு. ரஞ்சன் நாயக் (மொபைல் எண். 6362951653)** email: ranjan.naik@janabank.com தொடர்பு கொள்ளவும். அங்கீகரிக்கப்பட்ட அதிகாரிக்குத் தெரிந்த வரையில் சொத்துக்களின் மீது எந்த வில்லங்கங்களும் இல்லை, எனினும் ஏலத்தில் விடப்படும் சொத்துக்கள் விஷயமாக வில்லங்கங்கள் இதன் உரிமை குறித்து ஆர்வமுள்ள விலைக்குறிப்பீட்டாளர்கள் சொந்தமாக விசாரித்து அறிந்துகொள்வது அவசியம். இந்த அறிவிப்பானது மேற்குறிப்பிட்ட கடன்தாரர்கள்/ ஜாமீன்தாரர்கள்/ அடமானதாரர்கள் அடமான சொத்துக்களின் மின்-ஏலம் அட்டவணை அறிந்து கொள்ள அறிவிப்பாகும். கடன்தாரர்/ஜாமீன்தாரர்/அடமானதாரர் மின் ஏலம் நாளுக்கு முன் மேற்குறிப்பிட்ட தொகை அத்துடன் வட்டி மற்றும் மற்ற செலவினங்களுடன் செலுத்தலாம், தவறினால் சொத்தானது விற்பனை செய்யப்படும் மற்றும் ஏதேனும் நிலுவை இருந்தால் வட்டி மற்றும் கட்டணங்களுடன் வசூலிக்கப்படும்.

நாள் : 22.05.2025, இடம் : திருவள்ளூர்

Sd/- அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி, ஜனா ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட்

Published by Vijaya Arun at Kasturi Buildings, 859-860, Anna Salai, Chennai 600002 on behalf of KSL MEDIA LIMITED, and Printed by D.Rajkumar at THG PUBLISHING PVT.LTD. Plot B-6 & B-7, CMDA Industrial Complex, Maraimalai Nagar, Chengleput Taluk, Kancheepuram Dist.Pin: 603209, Editor: K Asokan (Editor responsible for selection of news under the PRB Act).